பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

12 03 2024 **TUESDAY** **12.40 PM**

ஆகாஷவாணி

தலைப்புச் செய்திகள்

1. ரயில்வே கட்டமைப்பு நவீனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பயணிகளுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு, மொரிஷீயஸ்ஸில் இன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

3. அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாக எப்போதும் விளங்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

4. வரும் மக்களவைத் தேர்தலில் திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மதுரை, திண்டுக்கல் தொகுதிகளும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாகப்பட்டினம், திருப்பூர் தொகுதிகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.

5. மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் மும்பை அணி இன்று பெங்களூரு அணியை எதிர்கொள்கிறது.

----- *இனி விரிவான செய்திகள்* --

<<<<<<<<>>>>>>>

ரயில்வேத்துறையின் வளர்ச்சிக்கு மத்திய அரசு உயர் முன்னுரிமை அளித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

குஜராத் மாநிலம் அகமதாபாதில், இன்று 85 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பிலான ரயில்வேத் திட்டங்களுக்கு அவர் அடிக்கல் நாட்டினார்.

இந்த விழாவின்போது 10 புதிய வந்தேபாரத் ரயில்களை காணொலி மூலம் அவர் கொடியசைத்து தொடங்கிவைத்தார்.

அப்போது பேசிய பிரதமர், கடந்த காலங்களில் சில அரசியல் கட்சிகளின் சுயநல செயல்பாடுகளால் ரயில்வேத்துறை பெருமளவில் பாதிப்புக்கு உள்ளானதாக தெரிவித்தார்.

மத்தியில் பிஜேபி அரசு பொறுப்பேற்ற பின்னர் ரயில்வே கட்டமைப்பு நவீனப்படுத்தப்பட்டுள்ளதாகவும், பயணிகளுக்கான வசதிகள் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும், சுயசார்பு இந்தியாவை செயல்படுத்துவதில் ரயில்வேத்துறை முக்கிய பங்களிப்பினை வழங்கியதாக அவர் புகழாரம் சூட்டினார்.

இன்றைய தினம் தொடங்கப்பட்டுள்ள திட்டங்கள் இளைய தலைமுறையினருக்கான பரிசு என்றும், வளமான எதிர்காலத்துக்கான உத்தரவாதத்தை அவை வழங்கும் என்றும் திரு நரேந்திர மோடி குறிப்பிட்டார்.

பிரதமர் இன்று சென்னை சென்ட்ரல் - மைசூரு இடையே வந்தேபாரத் ரயில் சேவையை காணொலி மூலம் தொடங்கி வைத்தார்.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தமிழக ஆளுநர் திரு ஆர்என் ரவி, மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணையமைச்சர் திரு எல் முருகன் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்த விழாவில் பேசிய திரு எல். முருகன், சென்னையை பல்வேறு நகரங்களோடு இணைக்கும் வகையில், மேலும் பல வந்தே பாரத் ரயில்கள் அறிமுகப்படுத்தப்பட உள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - எல். முருகன் - 26 செகண்ட்ஸ்)*

இன்று தொடங்கப்பட்ட ரயில்வேத்திட்டங்களின் ஒரு பகுதியாக திண்டுக்கல், திருச்சி, ஈரோடு உட்பட நாடு முழுவதும் பல்வேறு ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள பிரதமரின் மக்கள் மருந்தகங்களையும் காணொலி வாயிலாக பிரதமர் திறந்து வைத்தார்.

சேலம், நீலகிரி, நாமக்கல், விருதுநகர், அரியலூர், திருப்பத்தூர் ரயில் நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள “ஒரு நிலையம் - ஒரு தயாரிப்பு“ விற்பனையகங்களையும் பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று திறந்துவைத்தார்.

<<<<<<<>>>>>>>>

ராஜஸ்தான் மாநிலம் பொக்ரான் செல்லும் பிரதமர் திரு நரேந்திர மோடி, இன்று மாலை அங்கு அமைக்கப்பட்டுள்ள “பாரத் சக்தி” ஆயுத கண்காட்சியை பார்வையிடுகிறார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், பாதுகாப்புத்துறையில் நாடு அடைந்துள்ள சுயசார்பு நிலையை வெளிப்படுத்தும் விதமாக இந்நிகழ்ச்சி அமையும் என்று தெரிவித்துள்ளார்.

மேலும், பொக்ரான் ஒவ்வொரு இந்தியருடனும் உணர்வுப்பூர்வமான இணைப்பை கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

பாரத் சக்தியில் உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் பார்வைக்கு வைக்கப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு, மொரிஷீயஸ்ஸில் இன்று கௌரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டது.

**Port Louis** –ல் உள்ள மொரிஷீயஸ் பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற இந்த பட்டமளிப்பு விழாவில், அந்நாட்டு அதிபர் திரு **Prithviraj Sing Roopun,** பிரதமர் திரு **Pravind Kumar Jugnauth** ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

சிவில் சட்டப்பிரிவில் திருமதி திரௌபதி முர்மு-வுக்கு டாக்டர் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>>>

ஹரியானா முதலமைச்சர் திரு மனோகர்லால் கட்டார், இன்று தமது பதவியை ராஜினாமா செய்துள்ளார்.

தனது ராஜினாமா கடிதத்தை அம்மாநில ஆளுநர் திரு பண்டாரி தத்தாத்ரேயாவிடம் இன்று காலைஅவர் வழங்கினார்.

அவருடன், அவரது தலைமையிலான அமைச்சரவையும் ராஜினாமா செய்துள்ளது.

இதன் மூலமாக, ஹரியானாவில் பிஜேபி மற்றும் ஜனநாயக ஜனதா கட்சி இடையேயான நான்கரை ஆண்டுகால கூட்டணி முடிவுக்கு வந்திருப்பதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

பிஜேபி மூத்த தலைவரும், மத்திய உள்துறை அமைச்சருமான திரு அமித் ஷா, ஹைதராபாதில் இன்று அக்கட்சியினரை சந்தித்து பேசுகிறார்.

மேலும், அக்கட்சி சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொதுக்கூட்டத்திலும் இன்று பிற்பகல் அவர் பங்கேற்கிறார்.

தெலங்கானா மாநிலத்தில் பிஜேபி கட்சியினரிடையே தேர்தல் செயல்பாடு குறித்து விவாதிக்கும் வகையில் திரு அமித் ஷா-வின் பயணம் அமையும் என்று எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>>>

அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒரு பகுதியாக எப்போதும் விளங்கும் என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

அருணாச்சலப்பிரதேசத்துக்கு பிரதமர் திரு நரேந்திர மோடி சென்றது தொடர்பாக சீனா தெரிவித்த கருத்தை இந்தியா நிராகரித்துள்ளது.

இதுதொடர்பாக, செய்தியாளர்களை சந்தித்து பேசிய வெளியுறவுத்துறை அமைச்சக செய்தித்தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஷ்வால், அருணாச்சலப்பிரதேசம் இந்தியாவின் ஒருங்கிணைந்த மற்றும் பிரிக்க முடியாத பகுதியாக எப்போதும் விளங்கும் என்று தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>>

பெலாரஸ் வெளியுறவுத் துறை அமைச்சர் திரு **‘Sergai** எலெனிக் மூன்று நாள் அரசு முறைப் பயணமாக நேற்று மாலை புதுதில்லி வந்தடைந்தார்.

அவர் வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கரை இன்று சந்தித்துப் பேசவுள்ளார். பரஸ்பர நலன்கள், இந்தியா–பெலாரஸ் ஒத்துழைப்பை வலுப்படுத்துதல், மண்டல மற்றும் சர்வதேச விவகாரங்கள் குறித்து இரு அமைச்சர்களும் விவாதிக்க உள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

வரும் மக்களவைத் தேர்தலில் தமிழகத்தில், திமுக கூட்டணி சார்பில் போட்டியிடும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு மதுரை, திண்டுக்கல் தொகுதிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் முதலமைச்சர் திரு மு.க.ஸ்டாலினுடன் அக்கட்சியின் மாநிலச்செயலாளர் திரு கே பாலகிருஷ்ணன் மேற்கொண்ட சந்திப்பையடுத்து, இந்த அறிவிப்பினை திமுக வெளியிட்டுள்ளது.

திமுக கூட்டணியில் போட்டியிடும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சிக்கு நாகப்பட்டினம், திருப்பூர் தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

தொகுதி ஒதுக்கீடு தொடர்பாக திரு மு.க.ஸ்டாலின் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச்செயலாளர் திரு இரா. முத்தரசன் இடையே இன்று ஒப்பந்தம் கையெழுத்தானது.

<<<<<<<>>>>>>>

ஊரகப்பகுதிகளில் அதிக எண்ணிக்கையிலான விளையாட்டு வீரர்களை உருவாக்கும் நோக்கில் நாடு முழுவதும் கேலோ இந்தியா திட்டத்தின்கீழ், பல்வேறு கட்டமைப்புகளை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது.

அதன் ஒரு பகுதியாக, தமிழகத்தின் சேலம் மாவட்டத்தில், 10 கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ள செயற்கை இழை மைதானம் இளம் தலைமுறையினரிடையே வரவேற்பை பெற்றுள்ளது.

இந்த மைதானம் தங்களுக்கு பயன் அளிப்பதாக உள்ளது என்று அங்கு பயிற்சி பெற்றுவரும் விளையாட்டு வீரர்கள் தெரிவிக்கின்றனர்.

*(வாய்ஸ் பைட் - வீரர்கள் - 40 செகண்ட்ஸ்)*

<<<<<<<>>>>>>>

மத்திய விளையாட்டுத் துறை அமைச்சர் திரு அனுராக் தாக்கூர், கீர்த்தி என்ற திறன் தேர்வு நிகழ்வை சண்டிகரில் இன்று தொடங்கி வைக்கிறார்.

9 முதல் 18 வயதுக்குட்பட்ட விளையாட்டு வீரர்களின் திறன்களை வெளிக் கொண்டு வந்து பயிற்சி அளிப்பதை இந்த முன்முயற்சி, முக்கிய இலக்காகக் கொண்டுள்ளது என விளையாட்டு அமைச்சகம் கூறியுள்ளது.

அறிவிக்கப்பட்ட திறன் மதிப்பீட்டு மையங்கள் மூலம் வீரர்கள் மதிப்பீடு செய்யப்படுவார்கள் எனவும் முதல் கட்டமாக, வில்வித்தை, தடகளம், குத்துச்சண்டை, கால்பந்து, ஹாக்கி, கபடி, கோ-கோ, கைப்பந்து, பளுதூக்குதல் மற்றும் மல்யுத்தம் ஆகிய 10 கேலோ இந்தியா விளையாட்டுகளில் திறன் தேர்வு நடைபெறும் என்றும் விளையாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<<<<>>>>>>>

*__விளையாட்டுச் செய்திகள்__*

ஆல் இங்கிலாந்து ஓப்பன் பேட்மிண்டன் போட்டி பர்மிங்காமில் இன்று தொடங்குகிறது.

இந்தியாவின் சார்பில் ஆடவர் ஒற்றையர் பிரிவில் கிடாம்பி ஸ்ரீகாந்த், லக்ஷ்யா சென், எச்.எஸ். பிரனாய், பிரியன்சு ரஜாவத் ஆகியோர் பங்கேற்கின்றனர்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் பி.வி. சிந்து மற்றும் ஆகர்ஷி காஷ்யப் பங்கேற்கவுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ரங்கி ரெட்டி – சிராக் ஷெட்டி இணை பங்கேற்கவுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவில் தனிஷா கிறாஸ்டோ-அஸ்வினி பொன்னப்பா, திரிஷா ஜோலி-காயத்ரி கோபிசந்த் இணைகள் பங்கேற்கின்றன.

----------

**Orleans** மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்குகிறது.

பிரான்ஸில் நடைபெறும் இப்போட்டியில், ஆடவர் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் சங்கர் சுப்பிரமணியன், கிரண் ஜார்ஜ் உள்ளிட்டோரும், மகளிர் ஒற்றையர் பிரிவில் மாளவிகா பன்சூட் உள்ளிட்டோரும் பங்கேற்கின்றனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் எம்.ஆர். அர்ஜுன் - துருவ் கபிலா இணை பங்கேற்கிறது.

----------

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறும் ஆட்டத்தில் மும்பை அணி பெங்களுரு அணியை எதிர்கொள்கிறது.

----------------

சிங்கப்பூர் **Smash** டேபிள் டென்னிஸ் போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியாவின் சரத் கமல் - ஸ்லோவேனியாவின் **Daro Jorgic**-கை இன்று எதிர்கொள்கிறார்.